# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

u/s 173 BNSS ~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 154 இன் கீழ்)~~

C 8120324

1. District : சிவகங்கை
மாவட்டம்
PS: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
காவல்நிலையம்
Year: 2024
ஆண்டு
FIR No.: 09/2024
மு.த.அ. எண்
Date: 01.10.2024
நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Prevention of corruption act 1988 Sections பிரிவுகள்: 7
(iii) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: 106
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள் 01.10.2024
Date from : நாள் முதல்
Date to : நாள் வரை
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் 13.15 hrs
Time to : நேரம் வரை 18.30 hrs
(b) Information Received at PS. Date :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.10.2024
Time : நேரம் 19.15 hrs
(c) General Diary Reference : Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol III
Time : நேரம் 1930 hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 1 km தெற்கு
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி — வட்டார போக்குவரத்து அலுவலகம், மாவட்ட ஆட்சியர் வளாகம், சிவகங்கை.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — Tmt. தமிழ்செல்வி
(b) Father's/ Husband's Name :
தந்தை / கணவர் பெயர் — திருவீரணன்
(c) Date / Year of Birth :
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality :
நாட்டினம் — இந்தியன்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue :
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation :
தொழில் — துணை ஆய்வுக்குழு அலுவலர்
(g) Address :
முகவரி — இராமநாதபுரம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. Tr. முருகன், வட்டார போக்குவரத்து அலுவலர், சிவகங்கை மாவட்டம்
2. Tr. இராமகிருஷ்ணன், முதுநிலை உதவியாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் காரைக்குடி மண்டலம், சிவகங்கை கிளை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— தாமதமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 01.10.2024 தேதி 19.15 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது, இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள், துணை ஆய்வுக்குழு அலுவலர், திருமதி.கி.தமிழ்செல்வி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகார் மனுவை பெற்று, புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 01.10.2024-ம் தேதி 19.30 மணிக்கு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.9/2024 u/s. 7 of Prevention of Corruption Act 1988, as amended by the P.C.(Amendment) Act 2018 and sec.106 BNSS என வழக்கு பதிவு செய்தேன்.

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் T.S. ஜான் பிரைட் பதவி காவல் துணை கண்காணிப்பாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

01/10/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

01/10/2024 at 2015 hrs

Name: பெயர் R. ஜேசுதாஸ்
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
சிவகங்கை.

சிவகங்கை ஊ.த.க பிரிவு குற்ற எண்.9/2024 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி -

புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர் கி.தமிழ்செல்வி, த/பெ.கிருஷ்ணன், துணை ஆய்வுக்குழு அலுவலர், இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, சிவகங்கை. நாள்:01.10.2024, பொருள் : சிவகங்கை மாவட்டம் - சிவகங்கை வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் இணைச்சோதனை சம்மந்தமாக நடவடிக்கை எடுக்கக் கோருதல் தொடர்பாக. பார்வை : இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை மாவட்டங்கள் துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் நாள்:01.10.2024, இன்று 01.10.2024ம் தேதி சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவிலிருந்து தொடர்புகொண்டு, சிவகங்கை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் License, LLR, வாகனப்பதிவு, பதிவு புதுப்பித்தல், வாகன தகுதிச்சான்று ஆகியவற்றிற்கு லஞ்சம் கேட்டுப்பெறுவதாகவும், அவ்வலுவலகத்தில் அயல்பணியாக பணிபுரிந்து வரும் திரு.ராமகிருஷ்ணன் என்பவர் வட்டார போக்குவரத்து அலுவலருக்கு லஞ்சப்பணம் வசூல் செய்து கொடுப்பதாகவும் இரகசிய தகவல் உள்ளதாக தெரிவித்ததன் பேரில், இன்று 13.15 மணியளவில் சிவகங்கை, மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் அமைந்துள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை மாவட்டங்கள் துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான் மற்றும் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளர் திரு.சு.ஜேசுதாஸ் மற்றும் குழுவினருடன் திடீர் இணை சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, மேற்படி அலுவலகத்தில் பதற்றத்துடன் இருந்த திரு.P.ராமகிருஷ்ணன், த/பெ.பாலுச்சாமி, முதுநிலை உதவியாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், காரைக்குடி மண்டலம், சிவகங்கை கிளை என்பவரை விசாரணை செய்தபோது, அவர் காரைக்குடி மண்டல வணிக மேலாளர் உத்தரவுப்படி, கடந்த 20 ஆண்டுகளாக சிவகங்கை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தொடர்பு உதவியாளர் (Liaison Assistant) ஆக பணிபுரிந்து வருவதாகவும், அரசு பேருந்துகளுக்கு வாகன மாற்றம், வாகன நிறுத்தம், வரிக்கட்டுதல், FC பணி பார்த்தல் ஆகிய பணிகளை சிவகங்கை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பார்த்து வருவதாகவும் தெரிவித்தார். பின்னர் அவரை சோதனையிட்டபோது, அவரது மணி பர்சில் பணம் ரூ.5090/-மும், அவர்

வைத்திருந்த பச்சை நிற பாலீதீன் கவரில் ஐநூறு ரூபாய் கட்டுக்களாக கத்தை கத்தையாக பணம் மொத்தம் ரூ.3,28,000/- (Rs.500 X 654 + Rs.200 X 2 + Rs.100 X 6)-மும் இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் மேற்படி மணி பர்சில் வைத்திருந்த பணம் ரூ.5090/-த்தை மருத்துவ செலவு மற்றும் போக்குவரத்து செலவிற்காக வைத்திருந்த பணம் என்று கூறினார். எனவே, அந்தப்பணம் ரூ.5090/- அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் மேற்படி பணம் ரூ.3,28,000/- குறித்து கேட்டபோது, வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.மூக்கன் சொன்னதன்பேரில் வசூல் செய்து அவரிடம் கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்று கூறினார், வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.மூக்கனிடம் இதுகுறித்து கேட்டபோது, அவர் அந்தப்பணத்தை தனக்கு எதுவும் தெரியாது என கூறினார். எனவே, மேற்படி பணம் ரூ.3,28,000/- கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது வட்டார போக்குவரத்து அலுவலர் அறையிலிருந்த திரு.A.மூக்கன், த/பெ.அய்யாவு, வட்டார போக்குவரத்து அலுவலரை சோதனையிட்டபோது, அவரது மணி பர்சில் பணம் ரூ.5200/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் தனது கை செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் என்றும், அந்தப்பணத்தை அலுவலகத்தில் பராமரித்து வரும் பண கையிருப்புப்பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார். பண கையிருப்புப்பதிவேட்டினை சரிபார்த்ததில் அவரது பணம் ரூ.5200/- என குறிப்பிடப்பட்டிருந்ததால், மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலகத்தில் இருந்த திரு.M. மாதவன், த/பெ.V.முத்துக்கருப்பன், நேர்முக உதவியாளர் என்பவரை சோதனையிட்டபோது, அவரது மணி பர்சில் ரூ.360/-இருந்தது. அந்தப்பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் என்று கூறினார். அலுவலக பண கையிருப்புப்பதிவேட்டில், அவரது பணம் ரூ.360/- என குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே, மேற்படி பணம் ரூ.360/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலகத்தில் இருந்த திரு.S.துரைவேல், த/பெ.சண்முகம், கண்காணிப்பாளர் என்பவரை சோதனையிட்டபோது, அவரது மணி பர்சில் ரூ.80/-இருந்தது. அலுவலக பண கையிருப்புப்பதிவேட்டினை சரிபார்த்ததில், அவரது பணம் ரூ.220/- என குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அன்றாடச் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.220/-ல் ரூ.140/- செலவழித்துவிட்டதாகவும், மீதம் பணம் ரூ.80/- வைத்துள்ளதாகவும் கூறினார். எனவே, மேற்படி பணம் ரூ.80/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலகத்தில் இருந்த திரு.அஜ்ரின் கரீம்,

த/பெ.A.அப்துல் நசீர், உதவியாளர் என்பவரை சோதனையிட்டபோது, அவரது மணி பர்சில் ரூ.140/-இருந்தது. அலுவலக பண கையிருப்புப்பதிவேட்டில், அவர் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.200/- என குறிப்பிடப்பட்டிருந்தது. அவரிடம் மேற்படி பணம் குறித்து விளக்கம் கேட்டபோது, அவர் தான் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.200/-ல் டீ சாப்பிட ரூ.60/- செலவு செய்துவிட்டதாகவும், மீதம் பணம் ரூ.140/- வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். எனவே, அந்தப்பணம் ரூ.140/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலகத்தில் இருந்த திரு.R.துரைப்பாண்டி, த.பெ.V.ராஜு, கணக்கர் என்பவரை சோதனையிட்டபோது, அவரது மணி பர்சில் ரூ.100/-இருந்தது. அலுவலக பண கையிருப்புப்பதிவேட்டில், அவர் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.330/- என குறிப்பிடப்பட்டிருந்தது. அவரிடம் மேற்படி பணம் குறித்து விளக்கம் கேட்டபோது, அவர் தான் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.330/-ல் பஸ் செலவிற்காகவும், சாப்பாடு செலவிற்காகவும் ரூ.230/- செலவு செய்துவிட்டதாகவும், மீதம் பணம் ரூ.100/- வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். எனவே, அந்தப்பணம் ரூ.100/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவரது பராமரிப்பிலிருந்த Cash Box-ஐ பார்வையிட்டதில் அதில் பணம் ரூ.100/- இருந்தது. நில முன்பண பதிவேட்டினை சரிபார்த்ததில் அதில் கையிருப்பு பணம் ரூ.100/- என குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே, மேற்படி Cash Box-லிருந்த பணம் ரூ.100/-த்தை சரிபார்த்த பின்னர் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலகத்தில் இருந்த திரு.ஜ.தரேந்திரபூபதி, த/பெ.ஜனார்த்தனன், "B" பிரிவு கண்காணிப்பாளர் என்பவரை சோதனையிட்டபோது, அவரது சட்டைப்பாக்கெட்டில் பணம் ரூ.30/-இருந்தது. அலுவலக பண கையிருப்புப்பதிவேட்டில், அவர் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.700/- என குறிப்பிடப்பட்டிருந்தது. அவரிடம் மேற்படி பணம் குறித்து விளக்கம் கேட்டபோது, அவர் தான் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.700/-ல் ரூ.650/-ஐ மருந்துப்பொருட்கள் வாங்க செலவழித்துவிட்டதாகவும், ரூ.20/-ஐ டீ சாப்பிட செலவு செய்ததாகவும், மீதம் பணம் ரூ.30/- வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். எனவே, மேற்படி பணம் ரூ.30/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலகத்தில் இருந்த திரு.M.முத்துராஜா, த.பெ.முருகன், உதவியாளர் என்பவரை சோதனையிட்டபோது, அவரது மணி பர்சில் பணம் ரூ.572/-இருந்தது. அலுவலக பண கையிருப்புப்பதிவேட்டில், அவர் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.600/- என குறிப்பிடப்பட்டிருந்தது. அவரிடம் மேற்படி பணம் குறித்து விளக்கம் கேட்டபோது, அவர் தான் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.600/-ல் ரூ.28/-ஐ டீ சாப்பிட செலவழித்துவிட்டதாகவும், மீதம் பணம்

ரூ.572/- வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். எனவே, மேற்படி பணம் ரூ.572/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலகத்தில் இருந்த திருமதி.R.நாகராணி, க/பெ.ராமச்சந்திரன், தட்டச்சர் என்பவரை விசாரணை செய்தபோது, அவரது ஹேண்ட் பேக்கில் வைத்திருந்த பணம் ரூ.20/-த்தை எடுத்து ஆஜர் செய்தார். அலுவலக பண கையிருப்புப்பதிவேட்டில், அவர் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.420/- என குறிப்பிடப்பட்டிருந்தது. அவரிடம் மேற்படி பணம் குறித்து விளக்கம் கேட்டபோது, அவர் தான் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.420/-ல் ரூ.400/- மின் கட்டணம் செலுத்தியதாகவும், மீதம் பணம் ரூ.20/- வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். எனவே, மேற்படி பணம் ரூ.20/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலகத்தில் இருந்த திரு.G.பாண்டியன், த/பெ.குணசேகரன், இளநிலை உதவியாளர் என்பவரை சோதனையிட்டபோது, அவரது பேண்ட் பாக்கெட்டில் பணம் ரூ.100/-இருந்தது. அலுவலக பண கையிருப்புப்பதிவேட்டில், அவர் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.340/- என குறிப்பிடப்பட்டிருந்தது. அவரிடம் மேற்படி பணம் குறித்து விளக்கம் கேட்டபோது, அவர் தான் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.340/-ல் பேப்பர் வாங்கிய வகையில் ரூ.240/- செலவாகிவிட்டதாகவும், மீதம் பணம் ரூ.100/- வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். எனவே, மேற்படி பணம் ரூ.100/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலகத்தில் இருந்த திருமதி.N.சூர்யபிரியா, க/பெ.கார்த்திகேயன், உதவியாளர் என்பவரை விசாரணை செய்தபோது, அவரது மணி பர்சில் பணம் ரூ.800/-ஐ ஆஜர் செய்தார். அலுவலக பண கையிருப்புப்பதிவேட்டில், அவர் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.900/- என குறிப்பிடப்பட்டிருந்தது. அவரிடம் மேற்படி பணம் குறித்து விளக்கம் கேட்டபோது, அவர் தான் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.900/-ல் சாப்பாடு மற்றும் டீ செலவுக்கு ரூ.100/- செலவழித்துவிட்டதாகவும், மீதம் பணம் ரூ.800/- வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். எனவே, மேற்படி பணம் ரூ.800/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலகத்தில் இருந்த திரு.S.ராகேஷ், த/பெ.செல்வராஜ், இளநிலை உதவியாளர் என்பவரை சோதனையிட்டபோது, அவரது மணி பர்சில் பணம் ரூ.300/-இருந்தது. அலுவலக பண கையிருப்புப்பதிவேட்டில், அவர் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.300/- என குறிப்பிடப்பட்டிருந்தது. அவரிடம் மேற்படி பணம் குறித்து விளக்கம் கேட்டபோது, அவர் கை செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.300/- என தெரிவித்தார். எனவே, மேற்படி பணம் ரூ.300/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, அலுவலகத்தில் இருந்த திரு.S.ஆறுமுகம், த/பெ.வெள்ளைச்சாமி, அலுவலக உதவியாளர்

என்பவரை சோதனையிட்டபோது, அவரிடம் பணம் எதுவும் இல்லை. அலுவலகத்தில் இருந்த திருமதி.N.சித்ராதேவி, க/பெ.லெட்சுமணன், Data Entry Operator, Bonton Software Pvt. Ltd என்பவரை விசாரணை செய்தபோது, அவரது மணி பர்சிலிருந்து பணம் ரூ.30/-ஐ ஆஜர் செய்தார். அந்தப்பணம் அவர் போக்குவரத்து செலவுக்காக வைத்திருந்த பணம் ரூ.30/- என தெரிவித்தார். எனவே, மேற்படி பணம் ரூ.30/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலகத்தில் இருந்த செல்வி.S.சபீதாலெட்சுமி, த/பெ.சௌந்தரபாண்டியன், தட்டச்சர் என்பவரை விசாரணை செய்தபோது, அவரது பர்சில் பணம் ரூ.120/-ஐ ஆஜர் செய்தார். அலுவலக பண கையிருப்புப்பதிவேட்டில், அவர் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.200/- என குறிப்பிடப்பட்டிருந்தது. அவரிடம் மேற்படி பணம் குறித்து விளக்கம் கேட்டபோது, அவர் கை செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.200/-ல் பேனா வாங்கியது, டீ சாப்பிட்டது என ரூ.80/- செலவழித்துவிட்டதாகவும், மீதம் பணம் ரூ.120/- வைத்துள்ளதாகவும் கூறினார். எனவே, மேற்படி பணம் ரூ.120/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலகத்தில் இருந்த திரு.P.நாச்சியப்பன், த/பெ.P.பெருமாள், ஓட்டுநர் (Texco Pvt Ltd.,) என்பவரை சோதனையிட்டபோது, அவரது சட்டைப்பாக்கெட்டில் பணம் ரூ.300/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் டீ செலவு மற்றும் வீட்டிற்கு பொருட்கள் வாங்குவதற்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.300/- என தெரிவித்தார். எனவே, மேற்படி பணம் ரூ.300/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலகத்தில் இருந்த திரு.ஹமீது இப்ராஹிம், த/பெ.தமீம்முல்லா, உதவியாளர், காரைக்குடி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், காரைக்குடி, அயல்பணி வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகங்கை என்பவரை சோதனையிட்டபோது, அவரது பேண்ட் பாக்கெட்டில் பணம் ரூ.850/- இருந்தது. அலுவலக பண கையிருப்புப்பதிவேட்டில், அவர் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.900/- என குறிப்பிடப்பட்டிருந்தது. அவரிடம் மேற்படி பணம் குறித்து விளக்கம் கேட்டபோது, அவர் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.900/-ல் ரூ.50/- டீ சாப்பிட செலவாகிவிட்டதாகவும், மீதம் பணம் ரூ.850/- வைத்துள்ளதாகவும் கூறினார். எனவே, மேற்படி பணம் ரூ.850/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலகத்தில் இருந்த திரு.த.சுப்பிரமணி, த/பெ.தண்டபாணி, பதிவறை எழுத்தர், காரைக்குடி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், காரைக்குடி, அயல்பணி வட்டார போக்குவரத்து அலுவலகம், சிவகங்கை என்பவரை சோதனையிட்டபோது, அவரது சட்டைப்பாக்கெட்டில் பணம் ரூ.540/- இருந்தது. அலுவலக பண கையிருப்புப்பதிவேட்டில்,

அவர் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.990/- என குறிப்பிடப்பட்டிருந்தது. அவரிடம் மேற்படி பணம் குறித்து விளக்கம் கேட்டபோது, அவர் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.990/-ல் சாப்பாட்டு செலவு மற்றும் போக்குவரத்து செலவு ஆகியவற்றிற்கு ரூ.450/- செலவாகிவிட்டதாகவும், மீதம் பணம் ரூ.540/- வைத்துள்ளதாகவும் கூறினார். எனவே, மேற்படி பணம் ரூ.540/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் அலுவலர்கள் பணிபுரியும் மெயின் ஹாலில் B பிரிவு கண்காணிப்பாளர் திரு.தரேந்திர பூபதியின் இருக்கைக்கு கிழக்குப்புறத்தில் உள்ள கபோர்டில், 2வது ரேக்கில் ஆவணங்களுக்கு பின்னால் பணம் ரூ.3250/- (Rs.500 X 5, Rs.200 X 1, Rs.100 X 5, Rs.50 X 1) இருந்தது. மேற்படி பணம் குறித்து அலுவலர்களிடம் விளக்கம் கேட்டபோது, அந்தப்பணத்தை பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என கூறினார்கள். எனவே, மேற்படி கணக்கில் வராத பணம் ரூ.3250/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது விசாரணைக்காக கேட்டதன் பேரில் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.மூக்கன் ஆஜர் செய்த, 1) 2024ம் ஆண்டிற்கான பண கையிருப்புப்பதிவேடு, 2) 2024ம் ஆண்டிற்கான பணியாளர் வருகைப்பதிவேடு, 3) 2024ம் ஆண்டிற்கான BONTON & TEXCO Staffs வருகைப்பதிவேடு, 4) 2024ம் ஆண்டிற்கான மாற்றுப்பணி வருகைப்பதிவேடு, 5) நடமாட்டப்பதிவேடு, 6) 2024ம் ஆண்டிற்கான ஓட்டுநர் உரிமம், நகல் உரிமம் வழங்கும் பதிவேடு, 7) 2024ம் ஆண்டிற்கான ஓட்டுநர் உரிமம்- மறுதேர்வு நடத்தி உரிமம் புதுப்பித்தல் பதிவேடு, 8) 2024ம் ஆண்டிற்கான ஓட்டுநர் உரிமம் - பொதுப்பணியில்லை வழங்கும் பதிவேடு மற்றும் 9) 2024ம் ஆண்டிற்கான மேக்ஸி கேப் / சு.சீருந்து புதிய அனுமதி / அனுமதி புதுப்பித்தல் ஆகியவற்றை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது அலுவலகத்தில் பணியிலிருந்த 1) திரு.மூக்கன், வட்டார போக்குவரத்து அலுவலர் 2) திரு.ராமகிருஷ்ணன், முதுநிலை உதவியாளர், 3) திரு.மாதவன், நேர்முக உதவியாளர், 4) திரு.துரைவேல், கண்காணிப்பாளர், 5) திரு.அக்ரின் கரீம், உதவியாளர், 6) திரு.துரைப்பாண்டி, கணக்கர், 7) திரு.தரேந்திர பூபதி, கண்காணிப்பாளர், 8) திரு.முத்துராஜா, உதவியாளர், 9) திருமதி.நாகராணி, தட்டச்சர், 10) திரு.பாண்டியன், இளநிலை உதவியாளர், 11) திருமதி.சூர்யபிரியா, உதவியாளர், 12) திரு.ராகேஸ், உதவியாளர், 13) திரு.ஆறுமுகம், அலுவலக உதவியாளர், 14) திருமதி.சித்ராதேவி, Data Entry Operator, 15) செல்வி.சபீதாலெட்சுமி, தட்டச்சர், 16) திரு.நாச்சியப்பன், ஓட்டுநர், 17) திரு.ஹமீது இப்ராஹிம், உதவியாளர், 18)

திரு.சுப்பிரமணி, பதிவறை எழுத்தர் ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் தனித்தனியாக பதிவு செய்தேன். திடீர் சோதனை தொடர்பான செயல்முறை நடவடிக்கை குறிப்புகள் இன்று 01.10.2024-ம் தேதி 18.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் இணைச்சோதனையின்போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத லஞ்சப்பணம் மொத்தம் ரூ.3,31,250/-, ஆவணங்கள் மற்றும் வாக்குமூலங்கள் ஆகியவற்றை விசாரணைக்காக இத்துடன் இணைத்துள்ளேன். இந்த திடீர் சோதனை சம்மந்தமாக திரு.மூக்கன், வட்டார போக்குவரத்து அலுவலர், சிவகங்கை மற்றும் திரு.P.ராமகிருஷ்ணன், முதுநிலை உதவியாளர் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இணைப்பு மேற்கண்டவாறு. இப்படிக்கு ஒப்பம் கி.தமிழ்செல்வி.

Sir, Received the complaint on 01.10.2024 at 19.15 hrs. Found prima facie for the allegation of the complaint. Since, the matter is intimated to the SP/SR, V&AC, Chennai, obtained permission from the SP/SR, V&AC, Chennai and registered a case in Sivagangai V&AC Crime.No.9/2024 u/s 7 of Prevention of Corruption Act, 1988, as amended by the P.C.(Amendment) Act 2018 and sec.106 BNSS on 01.10.2024 at 19.30 hrs. sd.R.Jesudoss, Inspector of Police, V&AC, Sivagangai.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன்.

01/10/24

Inspector of Police
Vigilance & Anti- Corruption
Sivagangai.